சுருக்கம்

பள்ளிக் கல்வி – 2018–2019ஆம் ஆண்டிற்கான நிதிநிலை அறிக்கையில் அறிவிப்பு – 95 ஊராட்சி ஒன்றிய/நகராட்சி/மாநகராட்சி நடுநிலைப் பள்ளிகளை உயர்நிலைப் பள்ளிகளாக தரம் உயர்த்துதல் மற்றும் 5 அரசு பெண்கள் உயர்நிலைப்பள்ளிகள் உருவாக்குதல் – பள்ளிகளுக்கான தலைமையாசிரியர் மற்றும் பட்டதாரி ஆசிரியர் பணியிடங்கள் அனுமதித்தல் – ஆணை வெளியிடப்படுகிறது.

பள்ளிக் கல்வித் (அகஇ1) துறை

அரசாணை (நிலை) எண்:165

நாள் 07.08.2018
திருவள்ளுவர் ஆண்டு 2049
ஆடி 22

படிக்கப்பட்டது

பள்ளிக் கல்வி இயக்குநரின் கடித ந.க.எண். 18618/ஜி1/இ1/2018 நாள் 18.04.2018, 12.07.2018 மற்றும் 27.07.2018.

*********

ஆணை:–

தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையின் 2018–2019ஆம் ஆண்டிற்கான நிதிநிலை அறிக்கையில் மாண்புமிகு நிதியமைச்சர் அவர்களால் கீழ்க்கண்ட அறிவிப்பு வெளியிடப்பட்டுள்ளது :–

"2018–2019ஆம் ஆண்டில் 100 நடுநிலைப் பள்ளிகள் உயர்நிலைப் பள்ளிகளாகவும் 100 உயர்நிலைப் பள்ளிகள் மேல்நிலைப் பள்ளிகளாகவும் தரம் உயர்த்தப்படும்"

2. 95 ஊராட்சி ஒன்றிய நடுநிலைப் பள்ளிகளை அரசு உயர்நிலைப் பள்ளிகளாகத் தரம் உயர்த்தவும், 5 பெண்கள் உயர்நிலைப் பள்ளிகளை மேல்நிலைப் பள்ளிகளிலிருந்து தனியே பிரித்து உருவாக்கவும் ஆணை வழங்குமாறு மேலே படிக்கப்பட்ட கடிதத்தில் பள்ளிக் கல்வி இயக்குநர் அரசைக் கோரியுள்ளார். மேலும், இவ்வாறு தரம் உயர்த்தப்படும் 100 உயர்நிலைப் பள்ளிகளுக்கு 100 உயர்நிலைப் பள்ளி தலைமையாசிரியர் பணியிடங்கள் மற்றும் 500 பட்டதாரி ஆசிரியர் பணியிடங்கள் தோற்றுவிக்குமாறும், ஏற்கெனவே நடுநிலைப் பள்ளிகளாக செயல்பட்டு வரும் பள்ளிகளில் 1 முதல் 5 வகுப்புகள் தொடக்க பள்ளிகளாக நிலையிறக்கம் செய்யப்படும் என்பதால் அப்பள்ளிகளுக்கு தலா ஒரு தலைமையாசிரியர் பணியிடம் வீதம் 100 தொடக்கப் பள்ளி தலைமையாசிரியர் பணியிடங்கள் தோற்றுவிக்குமாறும் தெரிவித்து தோற்றுவிக்கப்படும் / நிலை உயர்த்தப்படும் பணியிடங்களுக்கான செலவினம் ஆண்டொன்றுக்கு தோராயமாக ரூ.15,63,13,800/– ஏற்படும் என பள்ளிக் கல்வி இயக்குநர் தெரிவித்துள்ளார்.

3. தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையின் 2018–2019ஆம் ஆண்டிற்கான நிதிநிலை அறிக்கையின் அறிவிப்பின் அடிப்படையில் பள்ளிக் கல்வி இயக்குநரின் கருத்துருவினை நன்கு ஆய்வு செய்து, 95 ஊராட்சி ஒன்றிய/நகராட்சி/மாநகராட்சி நடுநிலைப் பள்ளிகளை அரசு உயர்நிலைப் பள்ளிகளாக தரம் உயர்த்துவது / 5 அரசு பெண்கள் உயர்நிலைப்பள்ளிகளை உருவாக்குவது தொடர்பாக பின்வருமாறு அரசு ஆணையிடுகிறது:–

I. 2018–2019ஆம் கல்வியாண்டில் நடுநிலைப் பள்ளிகள் உயர்நிலைப் பள்ளிகளாக தரம் உயர்த்த நிர்ணயிக்கப்பட்டுள்ள நிபந்தனைகளை பூர்த்தி செய்யும் 95 (இணைப்பு –I) ஊராட்சி ஒன்றிய / நகராட்சி / மாநகராட்சி நடுநிலைப் பள்ளிகளை அரசு உயர்நிலைப் பள்ளிகளாக தரமுயர்த்தவும் மற்றும் 5 அரசு மேல்நிலைப் பள்ளிகளிலிருந்து 6 முதல் 10 வகுப்புகளில் படிக்கும் மாணவியரை பிரித்து 5 அரசு பெண்கள் உயர்நிலைப் பள்ளிகளாக உருவாக்கவும் அனுமதி வழங்கப்படுகிறது.

II. தரம் உயர்த்தப்படும் 95 அரசு உயர்நிலைப் பள்ளிகள் மற்றும் 5 அரசு பெண்கள் உயர்நிலைப் பள்ளிகளுக்கு அனுமதிக்கப்படும் 100 தலைமையாசிரியர் பணியிடங்களை தரம் உயர்த்தப்படும் நடுநிலைப் பள்ளிக்கான தலைமையாசிரியர் பணியிடங்களை (ஊதிய நிலை 14– ரூ.36,000 – 114000) நிலை உயர்த்தி உயர்நிலைப் பள்ளி தலைமை ஆசிரியர் பணியிடங்களாக (ஊதிய நிலை 16– ரூ.36,400 – 115700) அனுமதித்திடலாம்.

III. நிலை உயர்த்தப்படும் பள்ளி ஒன்றுக்கு 5 பட்டதாரி ஆசிரியர் பணியிடங்கள் வீதம் 100 பள்ளிகளுக்கு 500 பட்டதாரி ஆசிரியர் பணியிடங்கள் (ஊதிய நிலை 13 – ரூ.35,900 – 113500) புதிதாக தோற்றுவிக்கப்படுகிறது. தரம் உயர்த்தப்படும் நடுநிலைப் பள்ளிகளில் ஏற்கெனவே பணிபுரியும் 300 பட்டதாரி ஆசிரியர்களை ஈர்த்துக் கொண்டு மீதமுள்ள 200 பட்டதாரி ஆசிரியர் பணியிடங்களை பணியிடங்களுடன் பணிநிரவல் மூலம் நிரப்ப அனுமதி வழங்கப்படுகிறது.

IV. இவ்வாறு நிலை உயர்த்தப்படும் 95 ஊராட்சி ஒன்றிய / நகராட்சி/ மாநகராட்சி நடுநிலைப் பள்ளிகளில் ஏற்கனவே செயல்பட்டு வரும் 1 முதல் 5 வகுப்புகள் தொடக்கப் பள்ளிகளாக நிலையிறக்கம் செய்யப்படுகிறது. அப்பள்ளிகளுக்கு ஒரு தலைமையாசிரியர் பணியிடம் வீதம் 95 தொடக்கப் பள்ளி தலைமை ஆசிரியர் பணியிடங்கள் (ஊதிய நிலை 13 – ரூ.35,900 – 113500) புதிதாக தோற்றுவிக்கப்படுகிறது. தோற்றுவிக்கப்படும் தொடக்கப்பள்ளி தலைமை ஆசிரியர் பணியிடங்களை தொடக்கக் கல்வி இயக்ககத்தின் கீழ் உள்ள உபரி பணியிடங்களிலிருந்து நிரப்பலாம்.

V. இவ்வாறு தோற்றுவிக்கப்படும் / நிலை உயர்த்தப்படும் தலைமையாசிரியர் / ஆசிரியர் பணியிடங்கள் தற்போது உள்ள வழிமுறைகள் / விதிகளின்படி நியமனம் செய்துகொள்ள அனுமதி வழங்கப்படுகிறது.

VI. அரசாணை (நிலை) எண்.235, பள்ளிக் கல்வித் துறை, நாள் 24.05.1997 மற்றும் அரசாணை (நிலை) எண்.525, பள்ளிக் கல்வித் துறை, நாள் 29.12.1997–ல் குறிப்பிடப்பட்டுள்ள நிபந்தனைகளை பூர்த்தி செய்ய வேண்டும்.

4. (i) மேற்காணும் 95 ஊராட்சி ஒன்றிய / நகராட்சி / மாநகராட்சி நடுநிலைப் பள்ளிகள் அரசு உயர்நிலைப் பள்ளிகளாக தரம் உயர்த்தப்படுவதாலும், 5 அரசு பெண்கள் உயர்நிலைப் பள்ளிகள் மேல்நிலைப் பள்ளிகளிலிருந்து தனியே பிரித்து உருவாக்குவதாலும் இப்பள்ளிகளுக்கென தோற்றுவிக்கப்படும் / நிலை உயர்த்தப்படும் பணியிடங்களுக்கான சம்பளம் குறித்த செலவினம் கீழ்க்காணும் கணக்கு தலைப்பின் கீழ் பற்று வைக்கப்படவேண்டும் :–

"2202 பொதுக் கல்வி – 02 இடைநிலைக் கல்வி – 109 அரசு இடைநிலைப் பள்ளிகள் – மாநில செலவினங்கள் – AA அரசு இடைநிலை மற்றும் மேல்நிலைப் பள்ளி ஆசிரியர் மற்றும் பணியாளர்களின் சம்பளம் – 01 சம்பளங்கள்."

**(த.தொ.கு 2202–02–109–AA–0108)**

(ii) 100 தொடக்கப் பள்ளி தலைமையாசிரியர் பணியிடங்களுக்கான செலவினம் கீழ்க்காணும் கணக்குத் தலைப்பின் கீழ் பற்று வைக்கப்படவேண்டும் :–

<u>நகராட்சி தொடக்கப் பள்ளிகள்</u>

"2202 பொதுக் கல்வி – 01 தொடக்கக் கல்வி – 101 அரசு தொடக்கப் பள்ளிகள் – மாநில செலவினங்கள்– AA நகராட்சி, மாநகராட்சி தொடக்க பள்ளி ஆசிரியர்களுக்குச் சம்பளங்கள் – 01 சம்பளங்கள்"

**(த.தொ.கு 2202–01–101–AA-0105)**

<u>ஊராட்சி ஒன்றிய தொடக்கப் பள்ளிகள்</u>

"2202 பொதுக் கல்வி – 01 தொடக்கக் கல்வி – 101 அரசு தொடக்கப் பள்ளிகள் மாநில செலவினங்கள்– AC ஊராட்சி ஒன்றிய தொடக்கப் பள்ளி ஆசிரியர்களுக்குச் சம்பளங்கள் – 01 சம்பளங்கள்"

**(த.தொ.கு 2202–01–101–AC–0101)**

5. மேலே பத்தி 3ல் குறிப்பிட்டுள்ள செலவினம் ஒரு "புது துணைப் பணி" (NEW INSTRUMENT OF SERVICE) குறித்த செலவினமாகும். இதற்கு சட்டமன்றப் பேரவையில் ஒப்புதல் பின்னர் பெறப்படும். மேற்குறித்த ஒப்புதலை எதிர்நோக்கி இச்செலவினம் முதற்கண் எதிபாராச் செலவின நிதியிலிருந்து முன்பணம் பெறுவதன் மூலம் மேற்கொள்ளப்படும். முன்பணத்தை அனுமதிக்கின்ற ஆணைகள் நிதி (வ.செ.பொ– I)துறையில் தனியாக பிறப்பிக்கப்படும். அடுத்து வரும் துணை மானியக் கோரிக்கையில் இச்செலவினம் சேர்க்கப்பட்டு சட்ட மன்றப் பேரவையின் ஒப்புதல் பெறும் வரையில் நடப்பாண்டிற்கு தேவைப்படும் செலவினத்தை சரியாகக் கணக்கிட்டு, எதிர்பாரா செலவின நிதியிலிருந்து முன்பணம் பெறத் தேவையான விண்ணப்பத்தை எதிர்பாரா செலவின நிதி விதிகள் 1963–ல் உள்ள அட்டவணை "A" படிவத்துடன் இவ்வரசாணையின் நகலுடன் இணைத்து நிதி (வ.செ.பொ. I) துறைக்கு நேரடியாக அனுப்பி வைக்குமாறு பள்ளிக் கல்வி மற்றும் தொடக்கக் கல்வி இயக்குநர்கள் கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள். மேலும் இக்கூடுதல் செலவினத்திற்கான உரிய கருத்துருவை 2018–19 ஆம் ஆண்டிற்கான துணை மதிப்பீடுகளில் சேர்ப்பதற்கு தவறாது உரிய

நேரத்தில் நிதி (வ.செ.பொ.I/கல்வி II) துறைக்கு அனுப்பி வைக்குமாறு பள்ளிக் கல்வி மற்றும் தொடக்கக் கல்வி இயக்குநர்கள் கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

6. மேலே பத்தி 3–ல் ஆணையிடப்பட்டுள்ளவாறு தரம் உயர்த்தப்படும் பள்ளிகளின் தலைமையாசிரியர்கள் தத்தம் பள்ளியின் தலைமை அலுவலராக பணியாற்றுவார்கள், அவர்களால் அளிக்கப்படும் சம்பளம் மற்றும் இதர பட்டியல்கள் சரியாக இருக்கும் நிலையில் அதனை அனுமதிக்குமாறு அப்பகுதிக்குரிய சம்பளக் கணக்கு அலுவலர்கள் / கருவூல அலுவலர்கள் கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்.

7. இவ்வரசாணை நிதித்துறையின் கோ.எண் 41228/ கல்வி II /2018 நாள் 07.08.2018 மற்றும் அ.சா.கு எண் 41668/மைமஆபி/2018 நாள் 07.08.2018ல் பெறப்பட்ட ஒப்புதலுடன் வெளியிடப்படுகிறது. கூடுதல் நிதியொதுக்க பேரேட்டு எண் 943 (தொள்ளாயிரத்து நாற்பத்து மூன்று).

(ஆளுநரின் ஆணைப்படி)

பிரதீப் யாதவ்,
அரசு முதன்மைச் செயலாளர்.

பெறுநர்
பள்ளிக் கல்வி இயக்குநர், சென்னை–6.
தொடக்கக் கல்வி இயக்குநர், சென்னை–6.
மாநில திட்ட இயக்குநர்,ஒருங்கிணைந்த பள்ளிக் கல்வி திட்டம், சென்னை–6.
அனைத்து மாவட்ட ஆட்சித் தலைவர்கள்.
அனைத்து மாவட்ட கருவூல அலுவலர்கள்.
அனைத்து மாவட்ட முதன்மைக் கல்வி அலுவலர்கள்.
சம்பளக் கணக்கு அலுவலர், சென்னை–35.
மாநிலக் கணக்காயர், சென்னை–18/35.

நகல்:–
மாண்புமிகு முதலமைச்சரின் அலுவலகம், சென்னை–9.
மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சரின் நேர்முக உதவியாளர், சென்னை–9.
நிதி (கல்வி–II/வ.செ.பொ. II / I) துறை, சென்னை–9.
பள்ளிக் கல்வி (வரவு–செலவு) துறை, சென்னை–9.
இருப்பு கோப்பு / உதிரி நகல்.

// ஆணைப்படி அனுப்பப்படுகிறது//

பிரிவு அலுவலர். 7/8/18

அரசாணை (நிலை) எண். 165, பள்ளிக் கல்வி (அகஇ1) துறை, நாள் 07.08.2018

## இணைப்பு –1

## 2018–2019ஆம் கல்வியாண்டில் உயர்நிலைப் பள்ளியாக தரம் உயர்த்தப்படும் ஊராட்சி/நகராட்சி/மாநகராட்சி நடுநிலைப் பள்ளிகளின் பெயர் பட்டியல்

| வ. எண் | மாவட்டம் | ஒன்றியம் பெயர் | ஊராட்சி ஒன்றிய/நகராட்சி/மாநகராட்சி நடுநிலைப் பள்ளியின் பெயர் |
|---|---|---|---|
| 1. | அரியலூர் | திருமானூர் | ஊராட்சி ஒன்றிய நடுநிலைப் பள்ளி, எரக்குடி. |
| 2. | அரியலூர் | ஜெயங்கொண்டம் | ஊராட்சி ஒன்றிய நடுநிலைப் பள்ளி, தேவாமங்கலம் (தெற்கு). |
| 3. | பெரம்பலூர் | ஆலத்தூர் | ஊராட்சி ஒன்றிய நடுநிலைப் பள்ளி, கொட்டரை. |
| 4. | கோயம்புத்தூர் | சூலூர் | ஊராட்சி ஒன்றிய நடுநிலைப் பள்ளி, நீலம்பூர். |
| 5. | கோயம்புத்தூர் | பேரூர் | ஊராட்சி ஒன்றிய நடுநிலைப் பள்ளி, இடையார்பாளையம். |
| 6. | கோயம்புத்தூர் | மதுக்கரை | ஊராட்சி ஒன்றிய நடுநிலைப் பள்ளி, ஒத்தக்கால்மண்டபம். |
| 7. | கோயம்புத்தூர் | 44வது வார்டு | மாநகராட்சி நடுநிலைப் பள்ளி, நல்லாம்பாளையம். |
| 8. | கோயம்புத்தூர் | மேட்டுப்பாளையம் | மகாவீர் ஜெயின் நகராட்சி நடுநிலைப் பள்ளி, சங்கர் நகர். |
| 9. | கோயம்புத்தூர் | ஆனைமலை | ஊராட்சி ஒன்றிய நடுநிலைப் பள்ளி, இரமணமுதலிபுதூர். |
| 10. | கடலூர் | காட்டுமன்னார்கோவில் | ஊராட்சி ஒன்றிய நடுநிலைப் பள்ளி, நாட்டார்மங்கலம். |
| 11. | தருமபுரி | காரிமங்கலம் | ஊராட்சி ஒன்றிய நடுநிலைப் பள்ளி, குண்டகானூர். |
| 12. | தருமபுரி | பாலக்கோடு | ஊராட்சி ஒன்றிய நடுநிலைப் பள்ளி, ஈச்சம்பள்ளம். |
| 13. | தருமபுரி | பாலக்கோடு | ஊராட்சி ஒன்றிய நடுநிலைப் பள்ளி, ஜோகிப்பட்டி. |

| | | | |
|---|---|---|---|
| 14. | தருமபுரி | பென்னாகரம் | ஊராட்சி ஒன்றிய நடுநிலைப் பள்ளி, ஜெல்மாரம்பட்டி. |
| 15. | தருமபுரி | அரூர் | ஊராட்சி ஒன்றிய நடுநிலைப் பள்ளி, பொய்யப்பட்டி. |
| 16. | திண்டுக்கல் | வடமதுரை | ஊராட்சி ஒன்றிய நடுநிலைப் பள்ளி, நல்லாம்பட்டி. |
| 17. | திண்டுக்கல் | வடமதுரை | ஊராட்சி ஒன்றிய நடுநிலைப் பள்ளி, வி.குருந்தம்பட்டி. |
| 18. | ஈரோடு | தாளவாடி | ஊராட்சி ஒன்றிய நடுநிலைப் பள்ளி, குன்னன்புரம். |
| 19. | ஈரோடு | நம்பியூர் | ஊராட்சி ஒன்றிய நடுநிலைப் பள்ளி, சுண்டக்காம்பாளையம். |
| 20. | ஈரோடு | கோபிச்செட்டிப் பாளையம் | ஊராட்சி ஒன்றிய நடுநிலைப் பள்ளி, ஒடக்காட்டூர். |
| 21. | ஈரோடு | மொடக்குறிச்சி | ஊராட்சி ஒன்றிய நடுநிலைப் பள்ளி, கண்டிக்காட்டுவலசு. |
| 22. | ஈரோடு | சென்னிமலை | ஊராட்சி ஒன்றிய நடுநிலைப் பள்ளி, வாய்ப்பாடி. |
| 23. | ஈரோடு | சத்தியமங்கலம் | ஊராட்சி ஒன்றிய நடுநிலைப் பள்ளி, மாக்காம்பாளையம். |
| 24. | காஞ்சிபுரம் | குன்றத்தூர் | ஊராட்சி ஒன்றிய நடுநிலைப் பள்ளி, தூண்டல்கழனி. |
| 25. | காஞ்சிபுரம் | மதுராந்தகம் | ஊராட்சி ஒன்றிய நடுநிலைப் பள்ளி, தோட்டநாவல். |
| 26. | காஞ்சிபுரம் | திருக்கழுக்குன்றம் | ஊராட்சி ஒன்றிய நடுநிலைப் பள்ளி, வள்ளிபுரம். |
| 27. | கரூர் | கடவூர் | ஊராட்சி ஒன்றிய நடுநிலைப் பள்ளி, சோமணம்பட்டி. |
| 28. | கரூர் | தோகைமலை | ஊராட்சி ஒன்றிய நடுநிலைப் பள்ளி, பாதிரிப்பட்டி. |

| | | | |
|---|---|---|---|
| 29. | கிருஷ்ணகிரி | ஊத்தங்கரை | ஊராட்சி ஒன்றிய நடுநிலைப் பள்ளி, சந்திரப்பட்டி. |
| 30. | கிருஷ்ணகிரி | கிருஷ்ணகிரி | ஊராட்சி ஒன்றிய நடுநிலைப் பள்ளி, பெத்தனப்பள்ளி. |
| 31. | கிருஷ்ணகிரி | ஓசூர் | ஊராட்சி ஒன்றிய நடுநிலைப் பள்ளி, நந்திமங்கலம். |
| 32. | கிருஷ்ணகிரி | மாத்தூர் | ஊராட்சி ஒன்றிய நடுநிலைப் பள்ளி, பெரிய ஆலேரஅள்ளி. |
| 33. | மதுரை | சேடப்பட்டி | ஊராட்சி ஒன்றிய நடுநிலைப் பள்ளி, டி.கிருஷ்ணாபுரம். |
| 34. | மதுரை | அலங்காநல்லூர் | ஊராட்சி ஒன்றிய நடுநிலைப் பள்ளி, அய்யூர். |
| 35. | மதுரை | திருப்பரங்குன்றம் | ஊராட்சி ஒன்றிய நடுநிலைப் பள்ளி, கருவேலம்பட்டி. |
| 36. | மதுரை | மேலூர் | ஊராட்சி ஒன்றிய நடுநிலைப் பள்ளி, புலிப்பட்டி. |
| 37. | மதுரை | மதுரை | ஊராட்சி ஒன்றிய நடுநிலைப் பள்ளி, ஊர்மெச்சிகுளம். |
| 38. | நாகப்பட்டினம் | வேதாரண்யம் | ஊராட்சி ஒன்றிய நடுநிலைப் பள்ளி, பிராந்தியங்கரை. |
| 39. | நாகப்பட்டினம் | கீழையூர் | ஊராட்சி ஒன்றிய நடுநிலைப் பள்ளி, பெரியதும்பூர். |
| 40. | நாகப்பட்டினம் | மயிலாடுதுறை | ஊராட்சி ஒன்றிய நடுநிலைப் பள்ளி, தாழஞ்சேரி. |
| 41. | நாமக்கல் | பள்ளிபாளையம் | ஊராட்சி ஒன்றிய நடுநிலைப் பள்ளி, ஆவத்திபாளையம். |
| 42. | நாமக்கல் | மோகனூர் | ஊராட்சி ஒன்றிய நடுநிலைப் பள்ளி, எஸ்.வாழவந்தி. |
| 43. | நாமக்கல் | திருச்செங்கோடு | ஊராட்சி ஒன்றிய நடுநிலைப் பள்ளி, கருமகவுண்டம்பாளையம். |

| | | | |
|---|---|---|---|
| 44. | நாமக்கல் | கொல்லிமலை | ஊராட்சி ஒன்றிய நடுநிலைப் பள்ளி, சேப்பங்குளம்பட்டி. |
| 45. | நீலகிரி | கோத்தகிரி | ஊராட்சி ஒன்றிய நடுநிலைப் பள்ளி, சுள்ளிகூடு. |
| 46. | நீலகிரி | கூடலூர் | ஊராட்சி ஒன்றிய நடுநிலைப் பள்ளி, கரியசோலை. |
| 47. | புதுக்கோட்டை | விராலிமலை | ஊராட்சி ஒன்றிய நடுநிலைப் பள்ளி, பாக்குடி. |
| 48. | புதுக்கோட்டை | விராலிமலை | ஊராட்சி ஒன்றிய நடுநிலைப் பள்ளி, மாங்குடி. |
| 49. | புதுக்கோட்டை | அறந்தாங்கி | ஊராட்சி ஒன்றிய நடுநிலைப் பள்ளி, ஆத்தங்கரை. |
| 50. | புதுக்கோட்டை | புதுக்கோட்டை | ஊராட்சி ஒன்றிய நடுநிலைப் பள்ளி, மாந்தாங்குடி. |
| 51. | இராமநாதபுரம் | முதுகுளத்தூர் | ஊராட்சி ஒன்றிய நடுநிலைப் பள்ளி, வெங்கலக்குறிச்சி. |
| 52. | சேலம் | எடப்பாடி | ஊராட்சி ஒன்றிய நடுநிலைப் பள்ளி, குருக்கல்பட்டி. |
| 53. | சேலம் | கெங்கவல்லி | ஊராட்சி ஒன்றிய நடுநிலைப் பள்ளி, நடுவலூர். |
| 54. | சேலம் | மகுடஞ்சாவடி | ஊராட்சி ஒன்றிய நடுநிலைப் பள்ளி, கன்னந்தேரி. |
| 55. | சேலம் | ஆத்தூர் | ஊராட்சி ஒன்றிய நடுநிலைப் பள்ளி, தவளப்பட்டி. |
| 56. | சேலம் | பனமரத்துப்பட்டி | ஊராட்சி ஒன்றிய நடுநிலைப் பள்ளி, கம்மாளப்பட்டி. |
| 57. | சேலம் | ஓமலூர் | ஊராட்சி ஒன்றிய நடுநிலைப் பள்ளி, பாலக்குட்டப்பட்டி. |
| 58. | சிவகங்கை | திருப்புவனம் | ஊராட்சி ஒன்றிய நடுநிலைப் பள்ளி, கலியாந்தூர். |
| 59. | சிவகங்கை | சிவகங்கை | ஊராட்சி ஒன்றிய நடுநிலைப் பள்ளி, இலுப்பக்குடி. |

| | | | |
|---|---|---|---|
| 60. | தஞ்சாவூர் | பட்டுக்கோட்டை | ஊராட்சி ஒன்றிய நடுநிலைப் பள்ளி, கரையூர் தெரு. |
| 61. | தஞ்சாவூர் | பேராவூரணி | ஊராட்சி ஒன்றிய நடுநிலைப் பள்ளி, இடையாத்தி கோனார் தெரு. |
| 62. | ஈரோடு | அந்தியூர் | ஊராட்சி ஒன்றிய நடுநிலைப் பள்ளி, தாமரைகரை. |
| 63. | தேனி | சின்னமனூர் | ஊராட்சி ஒன்றிய நடுநிலைப் பள்ளி, அப்பிபட்டி. |
| 64. | தூத்துக்குடி | திருவைகுண்டம் | ஊராட்சி ஒன்றிய நடுநிலைப் பள்ளி, தோழப்பண்ணை. |
| 65. | திருச்சிராப்பள்ளி | மணப்பாறை | ஊராட்சி ஒன்றிய நடுநிலைப் பள்ளி, வடக்குசேர்பட்டி. |
| 66. | திருச்சிராப்பள்ளி | மருங்காபுரி | ஊராட்சி ஒன்றிய நடுநிலைப் பள்ளி, முத்தாழ்வார்பட்டி. |
| 67. | திருநெல்வேலி | வாசுதேவநல்லூர் | ஊராட்சி ஒன்றிய நடுநிலைப் பள்ளி, கூடலூர். |
| 68. | திருநெல்வேலி | வாசுதேவநல்லூர் | ஊராட்சி ஒன்றிய நடுநிலைப் பள்ளி, கூவாச்சிபட்டி. |
| 69. | திருநெல்வேலி | மானூர் | ஊராட்சி ஒன்றிய நடுநிலைப் பள்ளி, எட்டான்குளம். |
| 70. | திருநெல்வேலி | பாப்பாக்குடி | ஊராட்சி ஒன்றிய நடுநிலைப் பள்ளி, தாழைசுப்பிரமணியபுரம். |
| 71. | திருப்பூர் | காங்கேயம் | ஊராட்சி ஒன்றிய நடுநிலைப் பள்ளி, பெரியஇல்லியம். |
| 72. | திருப்பூர் | பல்லடம் | ஊராட்சி ஒன்றிய நடுநிலைப் பள்ளி, அண்ணாநகர். |
| 73. | திருப்பூர் | குடிமங்கலம் | ஊராட்சி ஒன்றிய நடுநிலைப் பள்ளி, புக்குளம். |
| 74. | திருப்பூர் | திருப்பூர் | நகராட்சி நடுநிலைப் பள்ளி, மாஸ்கோ நகர். |
| 75. | திருவள்ளூர் | வில்லிவாக்கம் | நகராட்சி நடுநிலைப் பள்ளி, மதுரவாயல். |

| | | | |
|---|---|---|---|
| 76. | திருவள்ளூர் | வில்லிவாக்கம் | நகராட்சி நடுநிலைப் பள்ளி, கள்ளிக்குப்பம். |
| 77. | திருவள்ளூர் | பொன்னேரி | ஊராட்சி ஒன்றிய நடுநிலைப் பள்ளி, ஆதிவராகபுரம். |
| 78. | திருவள்ளூர் | பொன்னேரி | ஊராட்சி ஒன்றிய நடுநிலைப் பள்ளி, அ.ரெட்டிபாளையம். |
| 79. | திருவண்ணாமலை | ஆரணி | ஊராட்சி ஒன்றிய நடுநிலைப் பள்ளி, மாமண்டூர். |
| 80. | திருவண்ணாமலை | வெம்பாக்கம் | ஊராட்சி ஒன்றிய நடுநிலைப் பள்ளி, மோரணம். |
| 81. | திருவண்ணாமலை | கலசப்பாக்கம் | ஊராட்சி ஒன்றிய நடுநிலைப் பள்ளி, நவாப்பாளையம். |
| 82. | திருவண்ணாமலை | கீழ்பென்னாத்தூர் | ஊராட்சி ஒன்றிய நடுநிலைப் பள்ளி, காட்டுமலையனூர். |
| 83. | திருவாரூர் | நன்னிலம் | ஊராட்சி ஒன்றிய நடுநிலைப் பள்ளி, உபயவேதாந்தபுரம். |
| 84. | திருவாரூர் | வலங்கைமான் | ஊராட்சி ஒன்றிய நடுநிலைப் பள்ளி, தென்குவளவேலி. |
| 85. | திருவாரூர் | நீடாமங்கலம் | ஊராட்சி ஒன்றிய நடுநிலைப் பள்ளி, காரக்கோட்டை. |
| 86. | வேலூர் | ஜோலார்பேட்டை | ஊராட்சி ஒன்றிய நடுநிலைப் பள்ளி, குடிமல்லூர். |
| 87. | வேலூர் | ஜோலார்பேட்டை | ஊராட்சி ஒன்றிய நடுநிலைப் பள்ளி, சின்னமூக்கனூர். |
| 88. | வேலூர் | நாட்றம்பள்ளி | ஊராட்சி ஒன்றிய நடுநிலைப் பள்ளி, கோணாமேடு, வாணியம்பாடி. |
| 89. | விழுப்புரம் | கானை | ஊராட்சி ஒன்றிய நடுநிலைப் பள்ளி, அதனூர். |
| 90. | விழுப்புரம் | ரிஷிவந்தியம் | அரசினர் ஊராட்சி ஒன்றிய நடுநிலைப் பள்ளி, பின்னல்வாடி. |
| 91. | விழுப்புரம் | வானூர் | ஊராட்சி ஒன்றிய நடுநிலைப் பள்ளி, பேராவூர். |

| | | | |
|---|---|---|---|
| 92. | விழுப்புரம் | வானூர் | ஊராட்சி ஒன்றிய நடுநிலைப் பள்ளி, முருக்கம்பாடி. |
| 93. | விருதுநகர் | வத்திராயிருப்பு | ஊராட்சி ஒன்றிய நடுநிலைப் பள்ளி, கீழ்கோட்டையூர். |
| 94. | விருதுநகர் | திருச்சுழி | ஊராட்சி ஒன்றிய நடுநிலைப் பள்ளி, சித்தலக்குண்டு. |
| 95. | விருதுநகர் | சாத்தூர் | ஊராட்சி ஒன்றிய நடுநிலைப் பள்ளி, மேலப்புதூர். |

பிரதீப் யாதவ்,
அரசு முதன்மைச் செயலாளர்.

//உண்மை நகல்//

பிரிவு அலுவலர். 7/8/18

அரசாணை (நிலை) எண். 165 , பள்ளிக் கல்வி (அகஇ1) துறை, நாள் 07.08.2018

இணைப்பு – 2

2018–2019ஆம் கல்வியாண்டில் மேல்நிலைப் பள்ளிகளிலிருந்து அரசு பெண்கள் உயர்நிலைப் பள்ளிகளாக தரம் உயர்த்தப்படும் பள்ளிகளின் பெயர் பட்டியல்

| வ. எண் | மாவட்டம் | ஒன்றியம் பெயர் | பள்ளிகளின் பெயர் |
|---|---|---|---|
| 1. | பெரம்பலூர் | பெரம்பலூர் | அரசு மேல்நிலைப் பள்ளி, பெரம்பலூர். |
| 2. | கடலூர் | பண்ருட்டி | அரசு மேல்நிலைப் பள்ளி, பண்ருட்டி |
| 3. | திருப்பூர் | திருப்பூர் | அரசு மேல்நிலைப் பள்ளி, பெருமாநல்லூர். |
| 4. | வேலூர் | நெமிலி | அரசு மேல்நிலைப் பள்ளி, திருமால்பூர். |
| 5. | விழுப்புரம் | திருக்கோவிலூர் | அரசு மேல்நிலைப் பள்ளி, ஜீ.ஆரியூர். |

பிரதீப் யாதவ்,
அரசு முதன்மைச் செயலாளர்.

//உண்மை நகல்//

பிரிவு அலுவலர். 7/8/18